பாசுரம் - 2

*வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச் *
செய்யும் கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி *
நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீராடி *
மையிட்டு எழுதோம் மலர் இட்டு நாம் முடியோம் *
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்று ஓதோம் *
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி *
உய்யும் ஆறு எண்ணி உகந்தேலோர் எம் பாவாய்.*

2.1 தத்வ ஹித புருஷார்த்தை அறிந்து, பகவத் கைங்கர்யத்தையே வேண்டி, பகவானிடம் ப்ரபத்தி செய்யுங்கால், அதற்குரிய அனுஷ்டானத்தை இப்பாட்டிலே சொன்னது.

2.2 *நாராயணனே* என்பதில் எம்பெருமானின் பரதத்துவ, ரக்ஷக, ஸௌலப்யத்தையும் *நமக்கே* என்பதில் ஜீவ ஸ்வரூபத்தையும் அறிந்த சேதனன் *பறை*யான நித்ய கைங்கர்ய பலனை விரும்பி அடைய கேவலம் சேஷத்வ ஞானம் மட்டும் போதாது.

2.3 தத்வ ஞானத்தால் தன்னை அறிந்து ஸ்ரீவிசிஷ்டனான எம்பெருமானின் பரத்வத்தை அறிந்து, இருள் தருமா ஞாலத்தின் தொல்வினை அறிந்து அதிலிருந்து விடுதலை வேணும் என்ற வைராக்யம் உண்டாகி மோக்ஷ பலனில் ஆசையுடன் இருக்கும் *நாமும்* எம்பெருமானை வசீகரிக்க செய்து ஆக வேண்டிய உபாய விசேஷத்தை சொன்னது.

2.4 ஈச்வர ஞானம் பிறந்து அது கனிந்து அதற்கு அநுகுணமான பக்தி இல்லை ப்ரப்த்தி யோகத்தை செயல் மூலமாய் அனுஷ்டித்து நித்ய கைங்கர்யத்தை பெறவிருக்கும் *நாமும்*

2.5 முமுக்ஷுவாகிய சேதனன் ஸாத்யோபாய விசேஷத்தை அனுஸந்திக்காமல் ஸித்தோபாயமான எம்பெருமானை வசீகரிக்க விரகில்லை.

2.6 அநாதி காலமாய் அடுக்கிய அபராதத்தால் எம்பெருமானுக்கு எழுந்த சீற்றத்தை தணிக்க உபாய விசேஷத்தை பற்றியே பலனைப் பெற வேணும்.

2.7 சேதனனின் ஆஞ்ஞாதிலங்கனத்தால் எம்பெருமானுக்கு ஏற்பட்ட சினத்தை தணிக்க ஸாத்யோபாயமான ப்ரபத்தி என்பது ஒரு வ்யாஜம். அதில் மகிழ்ந்த ஸித்தோபாயமான பகவான் தன் பரம க்ருபையால்தான் புருஷார்த்த பலனை அளிக்கிறான்.

2.8 *உய்யும் ஆறு எண்ணி* என்பது மந்திரன ரத்னமான த்வயத்தில் உள்ள ஆறு பதங்களையும் அறிந்து மனப்பூர்வமாக உச்சரித்து என்றது.

2.9 *உய்யும் ஆறு* என்பது ஆறு அங்கங்களை உடைய ஷடங்க யோகம் என்னும் சரணகதியான ப்ரப்த்தியைச் சொன்னது

ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்
ரக்ஷிஷ்யதீ தி விஶ்வாஸ: கோப்த்ருத்வ வரணம் ததா
ஆத்ம நிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா ஶரணாகதி:

- ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

2.10 *நம் பாவைக்கு* பாவை நோன்பு என்னும் விரதம். இங்கே பகவத் ப்ராப்திக்கான செய்யும் சரணாகதியின் அங்கியான ஆத்ம ஸமர்ப்பணத்தைச் சொன்னது.

2.11 *செய்யும் கிரிசைகள்* என்பதால் அந்த ப்ரபத்தி அனுஷ்டானத்திற்கு வேண்டிய அங்கங்களைக் காட்டியது.

ந்யஸ்யாம் அகிஞ்சந: ஸ்ரீமந் அநுகூல்யோந்ய வர்ஜித: |
விஸ்வாஸ ப்ரார்த2நா பூர்வம் ஆத்மரக்ஷா ப4ரம் தவயி ||

ந்யாஸ தஸகம் - 1

ஸ்ரீயப்பதியே! உனக்கு அனுகூலனாய், ப்ரதிகூலமின்றி, வேறு உபாயங்களற்ற நான், உறுதியுடன், என்னை காக்கும் பிராத்தனையும் முன்னிட்டு அடியேனை காக்கும் பொறுப்பை உன்னிடம் ஸமர்பிக்கிறேன்.

2.12 *பரமன் அடி பாடி, நாட்காலே நீராடி* பகவான் உகப்பவை செய்வதே *ஆநுகூல்ய ஸங்கல்பம்*. சாஸ்திர விதி முறையில் நடப்பதாய் மனப்பூர்வகமாக நினைப்பது. அதை வாய்விட்டு பகவானிடம் விண்ணப்பிப்பது. இங்கே செயலைச் சொன்னாலும்

அதற்கு வேண்டிய எண்ணத்தை காட்டுகிறது. ஸ்நான, த்யான, தான, மௌன, ஜப, பூஜை போன்றவை எம்பெருமான் உகந்தவை என்றன ப்ரமாணங்கள்.

2.13 ப்ரபத்தியின்போது இதை மனத்தினால் பூர்ணமாக எண்ணி வாயினால் சொல்லி இனி அப்படி நடப்பதாய் தீர்மானம் செய்வது. அதன் செயல் ரூபம் என்பது பகவத் கைங்கர்யத்தைச் சார்ந்தது.

2.14 *ஸ்ருதி ஸ்மிதிர் மமை வாஜ்ஞா யஸ்தாம் உல்லங்க்ய வர்த்ததே |*
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத் பக்தோபி ந வைஷ்ணவ: ||
- விஷ்ணு தர்மம்

ஸ்ருதி, ஸ்மிருதி ஆகிய என் ஆணையை மீறுபவன் என் பக்தனே ஆனாலும் அவன் வைஷ்ணவனாகான் என்றார் பகவான். பக்தனுக்கே இது என்றால் ப்ரபன்னனை கேட்கவும் வேணுமோ?

2.15 *வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை*
மெத்தையாக விரித்து அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காணலாம் கொல் என்ற ஆசையாலே
- பெரியாழ்வார் திருமொழி

என்ற பட்டர்பிரான் வாக்கின்படி ஜகத் ரக்ஷணகத்திற்கான உபாயத்தை சிந்தித்து கள்ள நித்திரை கொள்ளும் எம்பெருமான் *பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்*

2.16 *ந தத் ஸமஶ்ச: அப்யதிகஶ்ச த்ருஶ்யதே*
என்ற ஸ்ருதி வாக்யத்தாலும்
ஒத்தாரைமிக்காரை இலையாய மாமாயா - திருவாய்மொழி
என்ற வாக்கின்படியும் ஒப்பு உயர்வு அற்றவன். ஆதலால் *பரமன்*.

2.17 *ஐந்து பைந்தலை ஆட அரவணைமேல் **
*பாற்கடல் யோக நித்திரை **
*சிந்தை செய்ய எந்தாய் **
உன்னை சிந்தை செய்து செய்தே
- திருவாய்மொழி 2-6-6

பரமபதத்திலே படை சூழ அமர்ந்திருக்கும் கோலத்தை விட்டு ஆழ்வார்களுக்கு அழகை காட்டி, அனுபவம் தந்து ஆனந்தமான பாட்டைப் பெற்றவன் *பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்*

2.18 *கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டு*
பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்கனம் மறந்து வாழ்வீர் ஏழையேன் ஏழையேனே!
திருமாலை - 23
என்று தொண்டரடிப் பொடி மகிழ்ந்த கிடக்கும் திருக்கோலம்

2.19 *ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே*
நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீராார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக் குடந்தை
ஏராார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே
திருவாய்மொழி
என்ற கரைந்து உருகிய நம்மாழ்வார் போலே

2.20 பால் நிறைந்து பெருகி அதுவே கடலாய் ஒடும் ஆயர்பாடியே ஒரு பாற்கடல். அங்கே பெண்களின் அனுபவம், ராக்ஷஸ ஸம்ஹாரம், ஆஸ்ரிதரின் மோஷ ப்ராப்தி இவற்றை எல்லாம் யோக நித்திரை செய்யும் இளஞ்சிங்கம் கண்ணனே *பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்*.

2.21 *ஸ்ரீமந் நாராயண சரணௌ ஸரணம்* என்று பிராட்டியை விட்டு என்றும் அகலாத பகவானின் இரண்டு திருவடிகளையும் தஞ்சமாக பற்றி சராணகதி மந்திரமான த்வயம் அர்த்தானு ஸந்தானமே *அடி பாடி*.

2.22 எம்பெருமானின் ஸகல அவயங்களிலும் அவனுடைய திருவடிகளே சரணாகதருக்கு தாரக போஷக போக்யமாய் இருப்பதாலே *அடி பாடி*.

2.23 *அநதிக்ரமணியம் ஹி சரண க்ரஹணம்*.
அவன் விட்டிடுலும் அவன் திருவடி விடாது என்று இருக்கை. அதனால் *அடி பாடி*.

2.24 *திருக்கமல பாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே*
அமலனாதி பிரான் - 1
என்கிறபடி அந்த திரு *அடி பாடி*.

2.25 *பாஷாண நிர்மித தபோத$_4$ந த$_4$ர்மதா$_3$ரம்*
ப$_4$ஸ்மந் யுபாஹித நரேந்த்$_3$ர குமார பா$_4$வம்

ஸம்வாஹிதம் த்ரி த3ஶ நாத2 ரமா மஹீப4யாம்
ஸாமாந்ய தை3வத முSந்தி பத3ம் த்வதீ3யம்
தேவநாயக பஞ்சாஸத் - 41

என்று அகல்யைக்கு சாப விமோசனமும், உத்தரைக்கு பிறந்த கரிக்கட்டையை ராஜகுமாரனாக்கிய உன் திருவடியை திருமகளும் மண்மகளும் வருட என்று தேசிகன் அனுபவித்த அந்த அடி பாடி

2.26 உன் சேவடி செவ்வித் திருக்காப்பு
திருப்பல்லாண்டு - 1

ரக்ஷகதிற்கு எம்பெருமானின் திருவடியே நமக்கு காப்பு என்று அறிந்து இருக்கை. அதனாலே அடி பாடி.

2.27 உற்றேன் உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன்
- திருவாய்மொழி

என்னும் அடி பாடி, இங்கே பணி செய்வதாவது எம்பெருமான் உகந்தவற்றை செய்தல்

2.28 த்3வயம் அர்த2ானுஸந்தாநேந ஸஹ ஸதை3வம் வக்தா
- சரணாகதி கத்யம்

எம்பெருமானார் அருளிய முறையில் பரமன் அடி பாடி

2.29 நமக்கு ஆர் துணை என நாம் என்று அருள் தரும் நாரணனார்
உமக்கு ஆறு இவை என்று அடியிணக் காட்ட உணர்ந்து அடையும்
எமக்குஓர் பரம் இனி இல்லாது இருவினை மாற்றுதலில்
தமக்கே பரம் என்று தாம் முயலும் தரம் சாற்றுவோமே
- பரமத பங்கம் (45)

ஸ்ரீமந் நாராயணன் தன் திருவடிகளை உபாயமாக காட்டினான் என்றார் ஸ்வாமி தேசிகன் அதனால் அடிபாடி

2.30 கார்யாணாம் காரண பூர்வம் வசஸாம் வாச்யமுத்தமம்
யோகா3நாம் பரமாம் ஸித்3தி4ம் பரம்ம் தே பத3ம் வித3:
- ஜிதந்தே ஸ்லோகம்

எல்லா காரிய பொருளுக்கும் ஆதி காரணம். எல்லா சொல்லுக்கும் மேலான பொருள், எல்லா யோகங்களுக்கும் மேலான பலன் இவற்றைவிட உயர்ந்த உன்னுடைய திருவடி என்றது. அதனாலேஅடி பாடி

2.31 நெய் உண்ணோம், பால் உண்ணோம்,
மை இட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம்,

செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்று ஓதோம்
ப்ராதிகூல்ய வர்ஜனம் என்பது எம்பெருமானின் ஆக்ஞையான சாஸ்திர விதி முறைகளை மீறுவதில்லை என்னும் எண்ணம். விரத அனுஷ்டானத்தில் விலக்க வேண்டியவற்றை சொல்லி க்ருத்ய அக்ருத்ய விவேகத்தைச் சொன்னது

2.32 *நெய் உண்ணோம், பால் உண்ணோம்* விரதத்தின்போது சாஸ்திரத்தில் விலக்கப்பட்டவை என்பதை காட்டி அதை அறிந்து அனுஷ்டிக்கும் பிரபன்னர்கள் அவற்றை உண்ணும் அன்னத்திற்கு சமமாய் வைத்து பருகோம் என்னுமிடத்து உண்ணோம் என சொல்லியது.

2.33 எம்பெருமானையே அனுபவித்து ஆனந்திக்கும் ப்ரபன்னர்களுக்கு மற்ற போக்ய வஸ்துக்களும் இனிக்குமோ?
உண்டோ கண்கள் துஞ்சுதலே. திருவாய்மொழி

2.34 பகவானே ஸகலவிதமான அன்னமாய் இருப்பதால் பிரபன்னருக்கு மற்றதில் சுவை இல்லை.
அஹமந்நாதோ அஹமந்நாதோ அஹமந்நாதோ தைத்ரிய உபனிஷத்
செவிக்குணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கு ஈயப்படும்.

2.35 பிரபன்னர்களுக்கு பகவானை நினைத்து அர்ச்சிக்காத நாள் எதுவோ அதுதான் பட்டினி நாள்
கண்ணா! நான்முகனைப் படைத்தானே!
காரணா கரியாய்!, அடியேன் நான்
உண்ணாநாள் பசி ஆவது ஒன்றுமில்லை
ஓவாதே நமோ நாராயணா என்று,
எண்ணா நாளும் இருக் எசுர் சாம வேத
நாண் மலர் கொண்டு உன பாதம்,
நண்ணா நாள் அவை தத்தறுமாகில்
அன்று எனக்கு அவை பட்டினி நாளே - பெரியாழ்வார் திருமொழி

2.36 *பாதேயம் புண்டரீகாஷ நாம ஸங்கீர்தனாம்ருதம்*
வாழ்க்கை என்னும் பயணத்திற்கு எம்பெருமானின் திருநாம ஸங்கீர்த்தனமே கட்டு சோறாயிற்றே இப்பிரபன்னருக்கு

2.37 *மை இட்டு எழுதோம்* கண்ணில் மை இடுவது அழகிற்கும் திருஷ்டி கழிந்து நல்ல பார்வை உண்டாக வேணும் என்பதற்கு. அது ஞான யோகத்தை காட்டுவதால் அதைச் செய்யோம்.

2.38 *மலர் இட்டு நாம் முடியோம்* மலர் சூடுவது சுகத்தை காட்டுகிறது. பக்தி யோகம் என்பது போக்யமானது. அதைச் செய்யோம்.

2.39 ஆத்ம உஜ்ஜீவனத்திற்காக சரணாகதி செய்யும் எங்களுக்கு மை இடுவது மலர் சூடுவது போன்ற சரீர ஸம்பந்தமான காரியங்களில் சுகமில்லை.

2.40 *மறம் சுவர் மதிள்கள் எடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு*
புறம் சுவர் ஓட்டை மாடம் புரளும்போது அறிய மாட்டீர்
அறம் சுவராகி நின்ற அரங்கனார்க்கு ஆட்செய்யாதே
புறம் சுவர் கோலஞ்செய்து புள் கவ்வக் கிடக்கின்றனரே
திருமாலை 6

என்று அசேதனமான உடலை நோக்காது அதனுள் உறங்கும் உயிரை உய்விக்கும் வழி பின்பற்றினோம்

2.41 *செய்யாதன செய்யோம்*
முன்னோர் செய்யாத காரியங்களை நாமும் செய்வதில்லை. இது கர்ம யோகத்தை சொல்கிறது. அதைச் செய்யோம்

2.42 நீர் ஏன் இதர தெய்வங்களை தொழ வில்லை என்று கேட்டதற்கு *"எம் முன்னோர் அவ்வாறு செய்திலரே"* என்று பதிலளித்த கூரத்தாழ்வானைப் போலே *செய்யாதன செய்யோம்*

2.43 *வேதம் வல்லார்களைக் கொண்டு*
விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து
திருவாய்மொழி

எம்பெருமானை தனியாய் போய் சேவிக்காமல் ஆசாரியர்களுடன் வணங்குவது.

2.44 *தீக்குறளை சென்று ஒதோம்* பிறர்க்கு தீங்கு செய்யும் பொய், கோள் இவற்றை சொல்லோம். எம்முடைய குறைகளையும் ஆசைகளையும் முறையிடோம்.

2.45 இருபத்து நாலாயிரம் ஸ்லோகம் எழுதிய வால்மீகி பகவான் பிராட்டி அசோகவனத்திலே அனுபவித்ததை ராமனிடம் சொல்லி அழுதாள் என்று எழுதவில்லையே!

2.46 மானை வேண்டி மஹானைப் பிரிந்து ஹா ராமா! ஹா லக்ஷ்மணா! என்று கதறியதை அறிந்து போக்யமான பகவானே உயர்ந்த பலனாய் இருக்க மற்றதை விரும்பால் இருக்கை.

2.47 ஐயமும் கர்ம, ஞான, பக்தி யோகத்தில் தனக்கு திறமை இல்லை என்று தன்னுடைய இழிந்த நிலையை பகவானிடத்தில் சொல்லி வருந்துவது கார்ப்பண்யம். ஐயமாகிற கோழைத்தனம்.

2.48 ந த$_4$ர்ம நிஷ்டே $_2$ாஸ்மி ந ச ஆத்மவேதீ $_3$
ந ப$_4$க்திமாம்ஸ் த்வத் சரணாரவிந்தே$_3$ |
அகிஞ்சந: அந்ந்ய கதி ஶரண்ய!
த்வத் பாத$_3$ மூலம் ஶரணம் ப்ரப$_3$த்யே ||
- ஸ்தோத்ர ரத்னம் 22

ஆறாக எண்ணும் அறுங்கருமம் ஞானக் காதல் கொண்டு
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரக்தி இல்லை
- பிள்ளையந்தாதி 13

என்று எம்பெருமானை பெறுவதற்கு தன் கைம்முதல் அற்ற தன்மையைச் சொல்லி கர்ம, ஞான, பக்தி யோகங்ளைச் செய்ய சக்தி, ஞானம், பொறுமை, குடிப் பிறப்பு துளியும் அற்றவன் என்ற ஆகிஞ்சன்ய அனுஸந்தானம்.

2.49 அநந்யகதித்வம், அநந்ய ப்ரயோஜனம் இவை கொண்டு ப்ரபத்தியை அனுஸந்தித்து தம் கர்வம் ஒழியப் பெற்று எம்பெருமான முன் தாழ்ந்து நின்று அஞ்சலி செய்வது கார்ப்பண்யம்.

2.50 ஆகிஞ்சன்யமாவது உபாயந்தர ஸாமர்த்யபாவம். ஏனைய உபாயங்களில் ஆசையும் திறமையும் இன்மை. விரும்பும் பலனிற்கு சரணாதியைத் தவிர வேறு உபாயங்கள் இல்லாது இருக்கை. (Not qualified or interested in other means)

2.51 அநந்யகதிவமாவது ப்ரயோஜநாந்தர வைமுக்யம். கதி என்பது அடையும் பலனைச் சொன்னது. மோஷத்தை தவிர மற்றதில்

விருப்பம் இலாமை அநந்யகதிவம். (Not interested in other rewards)

2.52 *அநந்யகதிவமாவது சரண்யாந்தர வைமுக்யம்*. அடையும் கதியான மோஷத்தை எம்பெருமான் தவிர மற்றவரிடம் யாசிக்காமல் இருக்கை என்றும் மற்றொரு அர்த்தம். எம்பெருமான் ஒருவனிடத்தே மோஷத்தை அளிக்கும் அதிகாரம் இருப்பதால் இதில் சுவாரசியமில்லை.

2.53 கர்மமும், ஞானமும் பக்தி, ப்ரபத்திக்கு வழி. ப்ரபத்திக்கு அதிகாரி பக்தியில் அசக்தன். அதற்கு அவசியம் ஆகிஞ்சன்யமும் அநந்யகதிவமும். இந்த இரண்டும் வேண்டும். ஒன்று மட்டும் இருந்தால் உதவாது.

2.54 பக்தி யோகம் செய்ய இயலாதலால் எழுவது *ஆகிஞ்சன்யம்*. அதற்கு காரணம் ஞானம், ஜாதி, சக்தி இல்லாமை

2.55 மோஷத்தை பெறுவதில் பொறுமை இன்றி, கால தாமதம் விரும்பாமை (Impatience) *அநந்யகதிவம்*.

2.56 பக்தி யோகம் விட்டு ப்ரபத்திக்கு அதிகாரி ஆக காரணம் நாலு. பொறுமை, ஞானம், குலம், சக்தி இவை இல்லாமை (Void of TICE - Time, Intelligence, Caste, Energy).

2.57 இந்த நாலில் ஏதேனும் ஒன்று இல்லாமை இருந்தாலே போதும் அவன் ப்ரபத்திக்கு அதிகாரி. ஆக, இது 15 வகை ஆகிறது. (4 types of shortcomings create 15 possibilities).

2.58 *ஸ பித்ரா ச பரித்யக்த: ஸ்ரைஷ்ச ஸமஹர்ஷிபி:*
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:

-ராமாயணம்

எத்திசையும் உழன்று ஓடி இளைத்து விழும் காகம் போல்

- அடைக்கலப்பத்து 1

மூவுலுகும் சுற்றி இளைத்து விழுந்து தன்னால் செய்வது ஒன்றும் இல்லை (ஆகிஞ்சன்யம்), எம்பெருமான் திருவடி தவிர வேறு ஒரு உபாயமில்லை (அநந்யகதிவம்) என்று சரணம் புகுந்தான் காகாசுரன்.

2.59 *புகல் ஒன்றில்லா அடியேன்* என்பதால் ஆகிஞ்சன்யமும்
உன் அடிகீழ் அமர்ந்து புகுந்தேனே என்பதால் அநந்யகதிவமும் சொல்லப்பட்டது நம்மாழ்வாரால். (திருவாய்மொழி-)

2.60 *பத்தி முதாலம் அவற்றில் பதி எனக்கு கூடாமல் .. ..*
நகர்க்கு கருணை நாதனை நல் அடைக்கலமாய் அடைந்தேனே
அடைக்கலப்பத்து 1
என்று ஸ்வாமி தேசிகன் அருளினார்.

2.61 *அநாக3த அநந்த கால ஸமீஷியாபி அத்3ருஷ்ட ஸந்தாரோபாய:*
ஸ்ரீரங்க கத்யம்
இனி வரப்போகும் கணக்கில்லாத காலங்களிலும் இப்பிறவிக் கடலிருந்து என்னை விடுவித்து கரை ஏறுவதற்கு வழி அறியாத அகிஞ்சனன்

தத் ப்ராப்தயே ச தத் பாத3 அம்பு3ஜ த்3வய ப்ரபத்தே:
அந்யந்நமே கல்ப கோடி ஸஹஸ்ரேணாபி
ஸாதநம் அஸ்தி இதி மந்வாந:
ஸ்ரீவைகுண்ட்டகத்யம்
உமது திருவடிகளுக்கு கைங்கர்யம் செய்வதற்கு அந்த திருவடிகளே உபாயம். எனக்கு திறமையும், சக்தியும் இல்லை. தவிர மேலே வரும் ஆயிரக்கணக்கான பிறவிகளிலும் வேறு உபாயம் இன்றி இது (ப்ரபத்தி) ஒன்றே உபாயமாய் உள்ளது என்று எம்பெருமானார் அருளினார்.

2.62 *அஹமஸ்ய அபராத 4ானம் ஆலயோ அகிஞ்சநோ அக3தி: |*
த்வம் ஏவ உபாய பூ4தோ மே ப4வதி ப்ராத்த2நா மதி: ||
ஸரணாக3தி: இத்யுக்தா ஸா தே4வ: அஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ||
அஹிர்புத்ய ஸம்ஹிதை
பாபங்களுக்கு இருப்பிடம் நான். அகிஞ்சனன் நான். என்னை காத்துக் கொள்ள உபாயம் அற்றவன் நான். உன்னைத் தவிர வேறு கதி இல்லாதவன். நீயே எனக்கு உபாயமாக ஆவாய் என்னும் ப்ராத்திக்கும் அறிவே சரணாகதி.

2.63 *அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்து உலகும்*
நொந்தவரே முதலாக நுடங்கி அநந்நியராய்
வந்து அடையும் வகை வன் தகவு ஏந்தி வருந்திய
அந்தமிலா ஆதியை அன்பர் அறிந்து அறிவித்தனரே
- அதிகார சங்கிரகம் 17 ப்ரபத்தியோக்யதாதிகாரம்
ஸம்ஸார தாபத்தில் விழுந்து வருந்தும் கைம்முதல் இல்லாத

அனைவரும் வேறு வழியோ, வேறு பலனோ, வேறு தெய்வங்களையோ நோக்காது ப்ரபத்தி செய்யலாம். ப்ரபத்திக்கு அதிகாரி நொந்தவனே. அவன் முமுக்ஷூ. மோக்ஷத்தில் இச்சை உடையவன்.

2.64 *பிச்சையும்.* அகிஞ்சனான எனக்கு உபாய ஸ்தானத்தில் நீயே நின்று என்னை ரக்ஷித்து அருளணும் என்று பகவானிடம் யாசிக்கும் ப்ராத்தனை கோப்த்ருத்வ வரணம்.

2.65 *த்வம் மே கோபாயித பவ* என்று சரணாகதி செய்பவன் புருஷார்த்தத்தை யாசித்து பெறுவது

2.66 *உய்யுமாறு எண்ணி* - எண்ணி என்பது மஹா விசுவாசம். பகவான் கருணையையும், அவன் ரக்ஷா குணங்களையும் கேட்டு மகிழும்போது அவன் நம்மை ரக்ஷித்தே தீருவான் என்னும் திடமான, அசைக்கமுடியாத நம்பிக்கை கொள்ளுதல்.

2.67 ப்ரபத்திக்கு அத்யாவசியமானது மஹா விசுவாசம். இதில் துளியும் சந்தேகமின்றி திடமான மன உறுதி வேண்டும். சந்தேகம் என்பது இங்கே பலன் கிடைக்குமோ இல்லையோ என்ற தடுமாற்றத்தில் வேறு உபாயங்களை தேடுதல் போன்றவை. இப்படி செய்வது ப்ரம்மாஸ்திரத்தின் திறமையில் நம்பிக்கை இழந்து சணல் கயிற்றால் கட்டுவது போலே வீணாகும்.

2.68 மஹாவிசுவாசத்தில் வரும் சந்தேகங்களும் அதற்கு விடையும்.

- ஸர்வஜ்ஞன், ஸர்வ சக்தனான எம்பெருமானை பாபாத்மாவான சேதனன் எப்படி அணுகுவது என்னில் பிராட்டியின் பரிவுரையாலே அது ஸாத்யம்.
- வினைக்கு தகுந்தே பலன் என்று இருக்க, அளவற்ற ஆனந்தமான மோஷத்தை அடைய அதற்கு அளவான உபாயம் வேண்டாமோ என்னில் தந்தையின் சொத்து மகனுக்கு போலே. ப்ரபத்தி என்னும் சிறு வ்யாஜத்தைக் கொண்டு அளிக்கிறான்.
- அவாப்த ஸமஸ்த காமனான பகவான் சேதனனிடம் கேட்டுப் பெற வேண்டியது ஒன்றுமில்லையே! அணுவான ப்ரப்த்தி உபாயத்திற்கு அவன் எப்படி மோஷம் தருவான் எனில் பகவான் குழந்தையின் சிறு செயலுக்கு மகிழ்ந்து அதை பெரும்

உபகாரமாக எண்ணும் தந்தையைப்போல் தன் கருணயால் பலன் அளிக்கிறான்

- வேறு தேவதைகள் போல் விரைவில் பலன் அளிக்காத எம்பெருமான் எப்படி இங்கே பலன் அளிக்கிறான் என்னில் தன் ஸங்கல்பத்தால் வேறு கதியற்ற சேதனனுக்கு சேதனன் வேண்டிய காலத்திலே பலனைத் தருவது பகவானின் உதார குணத்தாலே.
- உத்தமனான பகவான் அல்பமான சேதனனுக்கு, நித்ய சூரிகளுக்கு சமமான மோஷம் தருவது எப்படி என்னில் தன் அடியவர் பேறே தன் பேறாக நினைப்பதாலே.

2.69 *வெறுமை உணர்ந்து முன்னிட்டு வேறு அங்கம் இல்லை என குறியவன் இன் நறவு எட்டக் குறித்திடும் கோணை துறந்து உறும் அயன் அத்திரம் என்னப், பொறா நிலை ஒர்ந்திட ஓர் அற நெறி அன்று உரைத்தான், அழியா அறம் ஆயினனே*

சரமஸ்லோக சுருக்கு - 2

என்று *ஸர்வ தர்மாந்* எனும் பதத்திற்கு குள்ளமானவன் இனிய கொம்புத்தேனை அடைய விரும்பும் லக்ஷியத்தில் வரும் துன்பத்தைபோலே என்றார் ஸ்வாமி தேசிகன்.

2.70 அல்ப பலனை வேண்டும் ப்ரபத்திக்கு ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான அஞ்சு அங்கங்கங்கள் மட்டுமே போதும்.

2.71 மோக்ஷத்தை விரும்பும் சரணாகதியில் இந்த அஞ்சு அங்கங்களுடன் *ஸாத்விக த்யாகம்* என்னும் ஆறாவதான அங்கியும் அவசியம். கீழே சொன்ன அஞ்சும் உபயுக்தங்கள்.

2.72 *ஸாத்விக த்யாகம்* என்பது ஸத்வ குணம் நிறைந்து தான், தனது என்று ஒன்றுமின்றி எல்லாம் எம்பெருமானே என்று இருக்கை. இது *கர்த்ருத்வ த்யாகம், மமதாத்யாகம், பலத்யாகம், பல உபாயத்வ த்யாகம்* என நாலு.

2.73 *கர்த்ருத்வ த்யாகம்*. தான் செய்வது ஒன்றுமில்லை, தன்னைக் கொண்டு எம்பெருமானே செய்விக்கிறான் எனும் நினைப்பு. (Bhagawan is the true Executor and not myself)

2.74 *மமதா த்யாகம்.* தனக்காகவே எதையும் செய்வதில்லை, எம்பெருமானுக்கே உத்தேச்யம் என நினைத்து செய்வது (The intention of any action is only for Bhagawan)

2.75 *பலத் த்யாகம்.* செய்கையின் பலன் எல்லாம் எம்பெருமானுக்கே அன்றி தனக்கில்லை என்னும் எண்ணம் (Bhagawan is the only one bears the fruits of all actions)

2.76 *பல உபாயத்வ த்யாகம்* என்பது மோக்ஷ பலனை வேண்டி செய்யும் சரணாகதியானது எம்பெருமானின் நிக்ரஹ நிவ்ருத்திக்கு ஒரு வ்யாஜமே தவிர ப்ரதான உபாயம் இல்லை. அனுக்ரஹ விசிஷ்டனான எம்பெருமான் ஒருவனே ஸாக்ஷாத் உபாயம் என்ற எண்ணம். (Prapatti is a means only to cool Bhagawan's temper. It is not a primary means for moksham. Bhagawan himself is the only direct means. Once He is pleased with your request, He awards the moksham through his limitless mercy)

2.77 *ஸ்வாமீ ஸ்வஶேஷம் ஸ்வவஶம்*
ஸ்வப$_4$ரத்வேந நிர்ப்ப$_4$ரம் |
ஸ்வத$_3$த்த ஸ்வதி$_4$யா ஸ்வார்த$_2$ம்
ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம் ||
ஸ்ரீந்யாஸ தசகம் 3

எம்பெருமான், தனக்கு அடிமையாய், தனக்கு வசமாய், என் பொறுப்பின்றி, தன் பொறுப்பாகவே,
தான் அளித்த, தன்னைப் பற்றிய ஞானத்தாலே, தன் பயனுக்காகாவே, தன்னிடத்தில், ஸமர்ப்பித்துக் கொள்கிறான், என்னை, தானாகவே என்றார் ஸ்வாமி தேசிகன்

2.78 *பிச்சையும்* இது ஆத்ம ஸமர்ப்பணமாகிற அங்கியையும் சொன்னது.

2.79 மனம் ஒன்றி மன்னிப்பு கேட்பதோடு மட்டுமின்றி திருடன் தான் களவாடிய பொருளை காவலனிடம் ஒப்படைக்க வேணும்.

2.80 திருடிய பொருளை உரியவனிடத்தில் சேர்ப்பதில்தான் நிர்பரத்வம். ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அவசியம். இங்கே திருட்டு என்பது ஆத்ம அபஹாரம். பகவானுக்கு சொந்தமான

இந்த அத்மாவை தனதாக பாவித்தலும். அந்ய தேவதைகளுக்கு சொந்தம் என கொண்டாடுதலும் திருட்டு குற்றம்

2.81 என்னை காக்கும் பொறுப்பை ஏற்று, என்னை நீயே ரஷித்து அருள் செய்ய வேணும் என்னும் ஆத்ம நிவேதனமே அங்கி

2.82 இந்த அங்கி *ஸ்வரூப ஸமர்ப்பணம் பர ஸமர்ப்பணம், பல ஸமர்ப்பணம்* எனும் மூணு.

2.83 *ஸ்வரூப ஸமர்ப்பணம்* என்பது தத்வ ஞானத்தை அறிந்து அதன்படியே நடத்தல்.

2.84 *தேஹாத்ம அபிமானம்* - தேகமே ஆத்மா என்னும் நினவு
ஸ்வதந்திர ஆத்ம அபிமானம் - ஆத்மா ஸ்வதந்த்ரன் எனும் நினவு ஆகிய ப்ரமங்களை (delusion) களைந்து அத்துடன் *சேஷத்வ பாரதந்திரியம்* அனைத்தும் பகவானுக்கே அடிமை *அநந்ய தேவதா ஸேஷத்வம்* மற்றவருக்கு அவை சேஷமாகாது என்னும் அறிவே தத்துவ ஞானம்.
ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தஞ்சமில்லை. ஸ்ரீமானான நாரயணன் ஒருவனே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம் என்றார் ஸ்வாமி தேசிகன்

2.85 *அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு ஸேஷா: அபரிக்ரய:*
த்வம் ஏவ சரணம் பராப்த: தத் கைங்கர்ய சி கிரிஷ்ய:
உடலைவிட வேறான ஆத்மாவாகிய நான் எம்பெருமானுக்கு அடிமை அந்த எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்ய வேண்டிய விருப்பத்தால் அந்த எம்பெருமானையே சரண் அடைந்தேன்

2.86 *வேறான உயிர் என்னும் யான் என்பது*
மாறாமல் மாதவனுக்கேஅடிமை என்றும்
கோணாமல் அடைந்தேன் கேசவன்தாள் சரணம்
வீணாத பலன் அவன் பணி எனக்கு இன்றியே

2.87 *பர ஸமர்ப்பணமா*வது தன்னையும் தன்னைச் சார்ந்தவையையும் காப்பது பகவான் பொறுப்பு. இதில் தனக்கு ஒரு ஸம்பந்தமும் இல்லை என்னும் நினைவு. பரம் என்னும்போது கடினமான பக்தி யோகம் எனும் சுமையை என்மேல் சுமத்தால் அதனால் வரக்கூடிய பலன் அனைத்தும் தந்தருள வேண்டும் என்பது.

2.88 *பல ஸமர்ப்பணம*ாவது தன்னை காப்பதால் வரும் பலன் எல்லாம் தனக்கின்றி எம்பெருமானுக்கே என்று இருக்கை.

2.89 *அஹம் மத்$_3$ரக்ஷணப$_4$ரோ மத்$_3$ரக்ஷண ப$_2$லம் தத$_2$ா |*
ந மம: ஸ்ரீபதே: ஏவ இதி ஆத்மாநம் நிக்ஷிபேத் பு$_3$த$_4$: ||
ஸ்ரீந்யாஸ தசகம் 1
அஹம் ந மம:, மத் ரக்ஷண பரம் ந மம:, மத் ரக்ஷண பலம் ந மம: நான் என்னும் ஆத்ம ஸ்வரூபமும், என்னை காக்கும் பொறுப்பும், என்னைக் காப்பதால் வரும் பலனும் எனக்கில்லை.

2.90 *உகக்கும் அவை உகந்து* என்பதால் ஆநுகூல்ய ஸங்கல்பமும்
உகவாஅனைத்தும் ஒழிந்து என்பதால் ப்ராதிகூல்ய வர்ஜனமும்,
மிகத்துணிவு பெற உணர்ந்து என்பதால் மஹா விசுவாசமும்,
வியன் காவல் என வரித்து என்பதால் கோப்த்ருத்வ வரணமும்,
ஜகத்தில் ஒரு புகலிலா தவம் அறியேன் என்பதில் கார்ப்பணயமும்,
நல் அடைக்கலமாய் அடைந்தேனே என்பதால் அங்கியும்
அடைக்கலப்பத்து 5
என்று தேசிகன் அருளினார்.

2.91 *நின் அருளாம் கதி இன்றி மற்று ஒன்று இலேன்* - கார்ப்பண்யம்
நெடுங்காலம் பிழை செய்து நிலைகழிந்தேன் ப்ராதிகூல்ய வர்ஜனம்
உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன் ஆநுகூல்ய ஸங்கல்பம்
உன் சரணே ஸரண் என்று துணிவு பூண்டேன் மஹா விசுவாசம்,
மன் இருளாய் நின்ற நிலை எமக்கு தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை கோப்த்ருத்வ வரணம்
இன் அருளால் இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல்
என் திருமால அடைக்கலம் கொள் நீயே
அமிருத ஸ்வாதினி - 31
என்பதால் அங்கியும் ஸ்வாமி தேசிகன் அருளினார்.

2.92 *நல் வழி ஏற்று அல் வழி துறந்து*
துணிவில் நிலைத்து காவலில் வரித்து
அழியாயுறவில் புகலின்றி தாளில்
தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே
உகத்தின் சுகம் - 15
என்று இதை ப்ரபத்தி முறையாக சொன்னோம்.

2.93 மஹா விசுவாசம் ஏற்பட, பரத்தை எம்பெருமானிடம் ஸமர்பிக்க, முதலில் அவனுடைய குணாதிசயங்களில் நம்பிக்கை வேணும். பகவான் எப்படிப்பட்டவன் என்னில் *ஸமர்த்தே ஸர்வஞ்ஞே ஸகஜஸ்ஹ்ருத்* ஸாமர்த்யவான். சேதனனின் நிலை அறிந்தவன் இயற்கையில் நல்லெண்ணம் உடையவன் (Well wisher). பிராட்டி ஸஹிதமாய் இருப்பவன். தன்னைப்போல் சேதனர்களும் வாழணும் என்னும் ஆசை உடையவன். அவன் குணங்களை அறிந்த சேதனன் அபராதத்தால் இழந்த அந்த ப்ராப்தி சராணகதியால் இன்று கூடியது என்று அவன்மேல் திட உறுதி கொள்கிறான்.

2.94 கோவில் இல்லாத இந்திர லோகத்தைவிட, பகவத் ஸந்நிதி இல்லாத ப்ரம்ம லோகத்தைவிட, அர்ச்சயா மூர்த்தி இல்லாத பரமபதத்தை விட, திவ்ய தேஸங்கள், புண்ய நதிகள், ஸமுத்திரங்கள், பொன் மயமான மேரு மலை, வசிஷ்ட, பராசர, வியாஸ முனிகள், மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்கள், நாதமுனி, யாமுனமுனி, ராமனுஜமுனி, கவிதார்க்கிக ஸிம்ஹம் ஆகிய ஆசாரியருடன் நிறைந்திருக்கும் *வையத்து வாழ்வீர்காள்*.

2.95 *விளையும் நிலத்திலேயே அளைந்து உண்ணாற்போலே,*
கரி அடுப்பிலே கமலம் பூத்தாற்போலே
இப்புவியிலேயே எம்பெருமானை பூஜிக்கும் ப்ரபன்னர்களே, நீங்கள்தாம் *வையத்து வாழ்வீர்காள்*.

2.96 *ஸதா3 பஶ்யந்தி ஸூரய:*
விஷ்ணு ஸூக்தம்
என்று நிறைந்த ஆனந்தத்துடன் எம்பெருமானை என்றும் நீங்காது அனுபவிக்கும் நித்யரைக் காட்டிலும் பத்தராய் இருந்து இருள் தருமா ஞாலத்திலேயே வாழ்ச்சி பெற்றவர்களே! நீங்கள்தாம் *வையத்து வாழ்வீர்காள்*.

2.97 *அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகர் உளானே*
திருமாலை - 2
என்ற தொண்டரடிப்பொடி ஆழ்வார் போலே

என் அமுதினைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே
அமலனாதிபிரான் 10
என்று மகிழ்ந்த பாணாழ்வார் போலே

பாவோ நாந்யத்ர கச்சதி
ராமாயணம்
என்று மகிழ்ந்த அனுமனைபோலே

*ஒன்று உண்டு செங்கண்மால் யான் உரைப்பது * உன்னடியார்க்கு*
என் செய்வன் என்றே இருத்தி நீ - நின் புகழிலும்
*வைகும் தம் சிந்தையிலும் மற்று இனிதோ * நீ அவர்க்கு*
வைகுந்தம் என்று அருளும் வான்
பெரிய திருவந்தாதி 53
என்று வினவிய மாறனைப் போலே .

நிரந்தரம் நிர்விஶத ஸ்த்வதீ3யம்
அஸ்ப்ருஷ்ட சிந்தாபத3ம் ஆபி4ரூப்யம் |
ஸத்யம் ஶபே வாரண ஶைலநாத2
வைகுண்ட2 வாஸேபி ந மே அபி4லாஷ: ||
வரதராஜ பஞ்சாஸத் - 49
என்ற ஸ்வாமி தேசிகன் போலே.

2.98 இங்குள்ள நீர்மை கண்டு அனுபவித்தவன் அங்குள்ள மேன்மையையும் விழைவானோ!
ஏரார் முயல் விட்டு காக்கை பின் போவதேன்
சிறிய திருமடல்

வேங்கடத்தை பதியாக வாழ்வீர்காள்
நாச்சியார் திருமொழி

விண்ணுளாரிலும் சீரியரே
திருவிருத்தம் 79

மாண்டு பிறப்பு ஒழிந்து வைகுந்தம் புக்கவரும்
மீண்டு தொழ காதலிக்கும் வேங்கடமே
என்றனர் முன்னோர்.

2.99 சரீரமாகிய வண்டியைக் கொண்டு இந்த பூமண்டலத்திலேயே ஆத்ம உஜ்ஜீவனத்திற்காக எம்பெருமானை அர்ச்சிப்பவர்களே நீங்கள்தாம் *வையத்து வாழ்வீர்காள்*
ஆத்மானாம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவது |
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவச ||
இந்த்ரியாணி ஹயன் ஆஹு: விஷயாம்ஸ் தேஷு கோசரான் |
ஆத்மேந்திரிய மனோயுக்தம் போக்தேத்யாஹுர் மனீஷினா: ||

கடோபனிஷத்

2.100 பாட்டு கேட்குமிடம் பரமபதம் என்று முதலில் வைகுண்ட நாதனை சொல்லி இங்கே நம் கூக்குரலைக் கேட்டு குறைகளை தீர்ப்பவனான க்ஷீராப்தி நாதனை சொல்லிற்று. பாட்டு கேட்குமிடமும், கூப்பீடு கேட்குமிடமும், குதித்த இடமும், வளைத்த இடமும் என்றனர் முன்னோர்.

2.101 *த்வத் சே2ஷத்வே ஸ்தி2ரதி4யம் த்வத் ப்ராப்தி ஏக ப்ரயோஜநம் |*
நிஷித்3த4 காம்ய ரஹிதம் குரு மாம் நித்ய கிங்கரம் ||

ஸ்ரீந்யாஸ தசகம் 5

உன் அடிமை என்பதில் மன உறுதியும், உன்னை அனுபவித்தலையே பலனாயும் கொண்ட என்னை அல்ப, அஸ்திர பலனாகிய செயல்களைச் செய்யாது நித்யமான கைங்கர்யம் செய்ய அருள்வாய்

அஸந்நேவ ஸ ப4வதி | அஸத் ப்3ரஹ்மேதி வேத3 சேத் |
அஸ்தி ப்3ரஹ்மேதி சேத் வேத3 | ஸந்தமேநம் ததோ வித3: ||

தைத்ரீயம் ஆனந்தவல்லீ

என்கிறபடி பிரம்ம ஞானத்தை அறிந்தவனே அறிவு உள்ளவன் ஆகிறான். பகவானுக்கு செய்யும் கைங்கர்யமே நிலையானது எனும் அறிவே உயர்ந்த ஞானம்

2.102 *அத2 சேத் த்வம் அஹங்காரத் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி*

ஸ்ரீபகவத் கீதை 18- 58

என் சொல்லை நீ கேளாவிடில் நசித்து போவாய் அர்ச்சுனா என்றான் கிருஷ்ணன் *கேளீரோ* என்பது கேட்டு அதன்படி நடக்கா விட்டால்

2.103 பகவத் விஷயத்தை காது கொடுத்து கேட்பதுதான் உயர்ந்தது.

ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:
ஸ்மரணம் பாத ஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்
ஸக்யம் ஆத்ம நிவேதனம்

பாகவதம்

என்ற 9 பக்தியில் முதலில் சொன்னது *கேளீரோ*

ஓம் பத்ரம் கர்ணேபி ஶ்ருணுயாம தேவா: |
பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா:

வேத சாந்தி பாடம்

காதுகளால் நல்லததைக் கேளுங்கள் என்றது கண்களுக்கு முன்னே. அதனால் *கேளீரோ*.

ஶ்ருத்வா குணாந் புவன சுந்தர ஸ்ருண்வதம் தே
என்றாள் ருக்மிணியும் தான் எழுதி அனுப்பிய ஸ்லோகத்தில். அதனால் *கேளீரோ*

2.104 உகந்து செய்யும் சரணாகதி என்பது பலத்யாகத்திற்கு முரணா? என்றால் மோக்ஷத்தை உத்தேசித்து செய்யும் சரணாகதி காம்யமாக இருந்தாலும் அதன் பலன் நமக்கின்றி நித்ய கைங்கர்யம் எம்பெருமானுக்கு செய்யவே என்னும்போது தெளிகிறது.

2.105 *உய்யுமாறு எண்ணி உகந்து*
உய்யுமாறு ஜீவன் உய்வது என்பது எம்பெருமானை அறிந்து கொள்வது. அது பரதத்துவம்.
எண்ணி என்பதாலே பகவானிடம் சரணாகதி அனைத்து அங்கங்களுடன் செய்வது. அது பரம ஹிதம்.
உகந்து என்பதால் எம்பெருமானை அனுபவித்தல். அது பரம புருஷார்த்தம். என்று தத்வ, ஹித, புருஷார்த்தங்கள் சொன்னது.

2.106 *ஆந்தனையும் கை காட்டி* ஷடங்க யோக அனுஷ்டானத்தை நன்றாக செய்து. அப்படி செய்தவர்தாம் *வையத்து வாழ்வீர்காள்*. உண்மையான வாழ்வு பெற்றவர்கள் க்ருதக்ருத்யர்கள். செய்வன செய்தவர்.

2.107 *ப4க3வத் ஸ்வரூப திரோத3ாந கரீம் விபரீத ஞான ஜநநீம்*
ஸ விஷயாஶ்ச பே4ாக்யபு3த்தே4ர் ஜநநீம்
தே3ஹேந்த்3ரியத்வேந பே4ாக்யத்வேந
ஸூக்ஷ்மரூபேண ச அவஸ்த்தி2தாம்
தை3வீம் கு3ணமயீம் மாயாம் த3ாஸ பூ4தம் ஶரணாக3தே4ாஸ்மி:
சரணாகதி கத்யம்
ஆத்ம அபஹாரம், தேஹாத்ம அபிமானம், சிற்றின்பஆசை, இதற்கு காரணமான முக்குணங்களால்கிய அதிசயமான மூல ப்ரகிருதி. அதிலிருந்து என்னை கரை ஏற்ற வேண்டும் பக்தியோடு கூடிய ப்ராத்தனை. அது *உகந்து*.

ப4க்த்யா த்வநந்நயா: ஶக்ய அஹம் ஏவம்வித4: அர்ஜீந |

பகவத் கீதை 11-54

என்கிறபடி வேறு ஒரு பயன் கருதாமல் ப்ரீதியோடு செய்யும் காரியத்திற்குத்தான் பலன்

2.108 ப்ரபத்தியின் அங்க, அங்கியை விளக்கி எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் செய்வதற்காய் மோஷத்தை வேண்டி செய்யும் சாத்யோபாயமான சரணாகதியைச் சொன்னது. அதை பூர்ணமாக செய்து இப்பூமியிலே பகவத் அனுபவம் மிக்கவரை *வையத்து வாழ்வீர்கள்* என்றது.